DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,
KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | SC. No. 111 of 2021 |
| Deposition of witness for | : | PW12 |
| Name | : | கணேஷ் குமார் |
| Father's Name | : | முனுசாமி |
| Village | : | தேன்கனிக்கோட்டை |
| Taluk | : | தேன்கனிக்கோட்டை |
| District | : | கிருஷ்ணகிரி |
| Profession | : | Inspector of Police |
| Age | : | 52 years |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 12th day of February 2026.

எதிரிகள் ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பெயரில் விசாரிக்கப்பட்டார்.

முதல் விசாரணை தொடர்ச்சி :–

இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட பொருட்களான பணம் ரூ.25,000/–, மரக்கட்டை, இரு சக்கர வாகனம் பதிவு எண். TN 24 Q 8182 ஆகியவற்றை நீதிமன்றத்திற்கு அனுப்பி C.P.No.3/2020 ஆக கொடுக்கப்பட்டது. இவ்வழக்கில் எதிரி சேரன் என்பவரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட சுமார் 2 அடி நீளமுள்ள கட்டை என்னிடம் காட்டப்படுவது தான். அந்த மரக்கட்டை **சா.பொ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரி சுமன் என்பவரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட TN 24 Q 8182 என்ற Bajaj Discover வாகனத்தின் புகைப்படம் **சா.பொ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது 394 r/w 397 இதச பிரிவின் கீழ் இறுதி அறிக்கை கிருஷ்ணகிரி, குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.II அவர்களிடம் தாக்கல் செய்தேன்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :–

வழக்கு சம்பந்தமாக எந்த தேதியில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் 08.11.2019 இல் கொடுக்கப்பட்டது. அந்த புகாரின் பெயரில் எத்தனை மணிக்கு புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன் என்றால் 09.11.2019 ஆம் தேதி காலை 08.30 மணிக்கு மகாராஜா கடை உதவி

ஆய்வாளர் சண்முகம் என்பவர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையை பெற்று புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு, 09.45 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்றேன். காவல் நிலையத்திலிருந்து 09.30 மணிக்கு கிளம்பி இருப்பேன். சம்பவ இடம் சுமார் 6 கி.மீ. தூரம் இருக்கும். சம்பவ இடத்திலோ அதற்கு அருகிலோ நிழற்கூடம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. நிழற்கூடம் இருந்திருந்தால் மாதிரி வரைபடத்தில் காண்பித்திருப்பேன் என்றால் காண்பித்துள்ளேன். மாதிரி வரைபடத்தில் நிழற்கூடம் என்று காட்டப்பட்டுள்ளதா என்றால் நிழற்கூடம் என்று குறிப்பிட்டு காண்பிக்கவில்லை, நிழற்கூடத்தை தான் பஸ் ஸ்டாப் என்று குறிப்பிட்டுள்ளேன். சம்பவ இடத்திற்கு அருகில் சக்னாவூர் செல்லும் பிரிவு சாலை எதுவும் இல்லை என்றால் வரைபடத்தில் இல்லை. வரைபடத்தில் நிழற்கூடமோ, சக்னாவூர் பிரிவு சாலையோ காட்டப்படவில்லை என்றால் சரியல்ல. அதனால் நான் சம்பவ இடத்தில் வைத்து வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் தயார் செய்திருந்தால் சரியான முறையில் தயார் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. பார்வை மகசரிலும் அ.சா.6 வெங்கடேஷ் சக்னாவூர் செல்லும் பிரிவு சாலையின் நிழற்கூடத்தில் கையொப்பம் செய்ததாகவும் அ.சா.7 ராமமூர்த்தி காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்ததாகவும் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றால் அதை பற்றி தெரியாது, அவர் என்னிடம் கொடுத்த வாக்குமூலத்தில் சக்னாவூர் என்று ஊர் சொல்லவில்லை, சக்னாவூர் கொடிவழி தான் உள்ளது. பார்வை மகசர் தயார் செய்ய 09.45 மணிக்கு சென்றேன். பார்வை மகசர் சாட்சிகள் அ.சா.6, அ.சா.7 ஆகியோர் 08.00 மணி முதல் 08.30 மணி வரை விசாரித்ததாக சொல்லி உள்ளார்கள் என்றால் சரிதான், காவல் நிலையத்திலிருந்து சம்பவ இடத்திற்கு உடன் வருகிறார்கள். பார்வை மகசர் சாட்சிகள் அ.சா.6, அ.சா.7 ஆகியோர் என்னுடன் வரவில்லை என்றாலும், நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரி கொடுத்ததாக சொல்லப்படும் அ.சா.7, அ.சா.8 முன்னிலையில் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எந்த ஒரு சான்றுப்பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. எதற்காக கையெழுத்து வாங்கினேன் என்ற விவரமும் அவர்களிடம் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. அதனால் தான் அ.சா.7 மற்றும் அ.சா.8 நீதிமன்ற சாட்சியத்தில் வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்று சொல்லி உள்ளார்கள் என்றால் சரியல்ல. அவர்கள் முன்னிலையில் விசாரித்து வாக்குமூலம் எதுவும் வாங்கவில்லை என்றாலும் காவல் நிலையத்தில் வரவழைத்து கையொப்பம் பெற்றுக் கொண்டேன் என்றாலும் சரியல்ல. அவர்கள் நீதிமன்ற சாட்சியத்தில் எதற்காக கையெழுத்து

வாங்கினார்கள் என்று தெரியாது என்று சொல்லி உள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அ.சா.1 தனது புகார் வாக்குமூலத்தில் கத்தியால் தாக்கியதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல் 161 வாக்குமூலத்திலும் அ.சா.1 கத்தியால் தாக்கியதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.1 புகார் வாக்குமூலத்திலும், 161 வாக்குமூலத்திலும் சம்பவத்தை நேரில் பார்த்ததாக யாருடைய பெயரையும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.2 முதல் விசாரணையில் சம்பவத்தை நேரில் பார்த்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.1 தன்னுடைய தோட்டத்திற்கு வந்து தான் தாக்கப்பட்டதை தெரிவித்ததாக சொல்லி உள்ளார் என்றால் சரிதான். மற்ற சாட்சிகளும் சம்பவத்தை யாரும் பார்க்கவில்லை என்று நீதிமன்ற சாட்சியத்தில் சொல்லி உள்ளார்கள் என்றால் சரிதான். அ.சா.1 இன் முதல் விசாரணை சாட்சியத்திற்கும் குற்றப்பத்திரிக்கைக்கும் வேறுபாடு உள்ளது என்றால் சரியல்ல. 1 ஆம் எதிரி தலையில் கட்டையால் தாக்கியதாகவும், 2 ஆம் எதிரி நிக்கர் பாக்கெட்டில் இருந்து பணம் எடுத்ததாகவும், 3 மற்றும் 4 ஆம் எதிரிகள் யாராவது வருகிறார்களா என்று பார்த்துக் கொண்டிருந்ததாகவும் குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இந்த விவரத்தை அ.சா.1 அவரின் புகார் வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 அவரது முதல் விசாரணையில் ஒரு நபர் கத்தியால் வெட்டினார் என்று கூறி, 3 ஆம் எதிரியை கை நீட்டி அடையாளம் காட்டி உள்ளார் என்றால் அது தெரியாது, எனது புலன் விசாரணையில் மரக்கட்டையால் தாக்கினார் என்று சொல்லி உள்ளார். புகாரிலோ, 161 வாக்குமூலத்திலோ எதிரிகளின் பெயர் குறிப்பிடாத போது சிறைச்சாலையில் அடையாளம் காட்ட அடையாள அணிவகுப்பு நடத்தப்பட்டதா என்றால் இல்லை, எதிரிகளின் புகைப்படம் செய்தித்தாளில் வந்தது, அதை பார்த்திருக்கலாம். எதிரி சேரன் என்பவரை எப்போது கைது செய்தேன் என்றால் 13.11.2019 ஆம் தேதி காலை 07.00 மணிக்கு கைது செய்தேன். எந்த இடத்தில் என்றால் ஆத்துவாய்க்கால் பிரிவு ரோட்டில் கைது செய்தேன். நான் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் கைது செய்யவில்லை என்றாலும், 11.11.2019 ஆம் தேதி திருப்பூரில் பனியன் கம்பெனியில் வேலை செய்து கொண்டிருந்தபோது அங்கு சென்று கைது செய்தேன் என்றால் சரியல்ல. 11.11.2019 இல் கைது செய்து இரண்டு நாட்கள் கழித்து தான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினோம் என்றால் சரியல்ல. 2 முதல் – 4 எதிரிகளையும் அதே இடம் அதே நேரத்தில் தான் கைது செய்தேன். 2 ஆம் எதிரி சுமன் என்பவரை 14.11.2019 ஆம் தேதி அவரது வீட்டில்

விடியற்காலை 04.00 மணிக்கு கைது செய்தேன் என்றாலும், நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. 3 ஆம் எதிரி அருண் 10.11.2019 ஆம் தேதி முருகன் கோவில் அருகில் காலை 08.30 மணிக்கு கைது செய்தேன் என்றாலும், நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. 4 ஆம் எதிரி மின்சாரகண்ணா என்பவரை 13.11.2019 ஆம்தேதி நீதிமன்றத்திற்கு சென்று விட்டு வரும்போது நீதிமன்றத்திற்கு வெளியே மாலை 02.30 மணிக்கு கைது செய்தேன் என்றாலும், நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலங்களை மடிக்கணினியில் தட்டச்சு செய்ததாக சொல்லி உள்ளேன். அது யார் தட்டச்சு செய்தது என்றால் போலீஸ் Data Entry Operator தட்டச்சு செய்தார். தட்டச்சு செய்த தலைமைக் காவலர் கன்னிகா என்பவரை விசாரித்து 161 வாக்குமூலம் பெற்றுள்ளேனா என்றால் இல்லை. நான் சான்றுப் பொருட்களை சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சொன்ன இடத்தில் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் நடந்திருந்தால் சாட்சிகள் சொல்லியிருப்பார்கள் என்றாலும் சரியல்ல. நான் இவ்வழக்கு குறித்து சரியான முறையில் புலன் விசாரணை மேற்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. எல்லா சாட்சிகளையும் காவல் நிலையத்திற்கு வரவழைத்து காவல் நிலையத்திலேயே தயார் செய்து கொண்டேன் என்றால் சரியல்ல. புள்ளிவிவர கணக்கிற்காக ஒரு பொய்யான புகாரை பெற்று எதிரிகள் மீது பொய்யான முதல் தகவல் அறிக்கையும், குற்ற அறிக்கையும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை :–</u>

இல்லை.

M SANTHI

CHIEF JUDICIAL MAGISTRATE, KRISHNAGIRI.
Digitally signed by M SANTHI

தலைமை குற்றவியல் நடுவர்,
கிருஷ்ணகிரி.